

மகாஜனன்

# MAHAJANAN

NEWS LETTER 24-06-93



# MAHAJANAN BECAME MAYOR OF LEWISHAM

## FIRST TAMIL IN WESTERN EUROPE



Councillor Sinna Mani (Mr Subramaniam) became the first citizen of Lewisham on 12 May 1993. Mr Sinna Mani originalLy came from Thunnalai in Vadamaradchi, lived with his grand father in Koddolai, Tellippalai.

He was a student at Saiva Pragasa Vidyalayam (Iyattai Pallikoodam), Tellippalai ,and latter joined Mahajana College. He studied at our school for three years between 1948 and 1950.

Cllr Sinna Mani holds the International Ambedkar Centenary Award, an honour which he shares with Nelson Mandela and Jesse Jackson. Cllr Mani received the award for out standing service to human rights for his contributions as national chair of the British Organisation .of people of Indian Origin. He was previously awarded the prestigious Houghton Award for Animal Welfare.

Cllr Mani has been the Deputy Mayor of the London Borough of Lewisham for the past year, first elected to the council in 1986 from Sydenham west ward.

WE MAHAJANS SALUTE MR MANI FOR HIS ACHIEVEMENTS.

*MAHAJANA COLLEGE*

OLD STUDENTS ASSOCIATION (U.K)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PRESIDENT'S MESSAGE



Dear Mahajanan

I am pleased to inform you that the organisation were able to participate in the cricket and football tournament organised by the JSSA (UK) and we reached the semifinal in the cricket knockout competition and unfortunately we were knocked out in the initial stages in football.

Our college have a great tradition in football and cricket and we should keep up these tradition. I asked our recent past players to contact the secretary and give their names addresses and phone numbers so that a pool of names can be kept for future competitions.

Our fund raising function dance performance by Mrs Chitra Viswaswaren was successful and we were able to raise more than 1000 pounds. My sincere thanks to Mrs Viswaswaren and her troupe and all those who gave their full support to make the function a success.

It is sad to see there is no improvement in the situation back home. The school is functioning from Ramanathan College which is not a good situation to be.

We should continue raise funds in the hope that things will improve and we will be in a good position to help the college in the hour of need.

I hope to see you all at the open day. Make it a day for your family and you to remember.

Best wishes and good luck.

G Natkunan
President

**CONTACT ADDRESS:**

MAHAJANA COLLEGE OSA (UK)
67 HAZELMERE CLOSE
NORTHOLT
MIDDLESEX UB5 6UP
Tel: 081 - 841 5186

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Lewisham**

**Mayor's Office**

Mayor – Councillor Sinna Mani

Civic Suite
Lewisham Town Hall
London SE6 4RU
T-phone 081 - 695 6000
ext 3290
Fax 081 - 314 6070

16th June 1993

I am very pleased to be invited to the Reunion of the Mahajana College Old Students Association (U.K.) I hope I will be able to recognize some of my old friends.

I really appreciate the fact that you have chosen to invite me after all these years and I look forward to seeing you all on Saturday, 3rd July in the afternoon.

S. Mani

Mayor of Lewisham

## நான்கு தங்கப்பதக்கங்கள்

யாழ். மாநகரசபை அண்மையில் நடத்திய பாடசாலை மாணவர்களுக்கிடையிலான பேச்சு, சமய அறிவு, பண்ணிசைப் போட்டிகளில் யா/ தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி நான்கு தங்கப்பதக்கங்களை பெற்றுக்கொண்டது.

பேச்சுப் போட்டி - மேற்பிரிவில் முதலாம் இடம் செல்வி வினோதினி விஜயரத்தினம்.

சமய அறிவு - மேற்பிரிவில் முதலாம் இடம் செல்வன் கந்தசாமி முகுந்தன், கீழ்ப்பிரிவில் முதலாம் இடம் செல்வி சுவர்ணா நாகேந்திரம்.

பண்ணிசை - மத்திய பிரிவில் முதலாம் இடம் செல்வி சிவரதி சிவபாலன் (சிவரதி) ஆகியோரும் தங்கப்பதக்கங்களைப் பெற்று கல்லூரிக்கு பெருமைதேடிக் கொடுத்தனர்.

ஆர். ரி. சுப்பிரமணியம்



சுவர்ணா



வினோதினி



முகுந்தன்



சிவரதி

# Editorial

மூன்றாவது ஆண்டாக தொடர்ந்து இம்மடலினை வெளியிடுகின்றோம்.

1910 இல் தெல்லிப்பளைக் கிராமத்தில் அமரர் "பாவலர்" துரையப்பாபிள்ளையினால் ஆரம்பிக்கப்பட்ட மகாஜன அன்னைக்கு இன்று 83 வயது. கடந்த 10 ஆண்டுகளாக எமது மண்ணில் தொடர்ந்து இடம் பெறும் போரினால் மக்களைப் போலவே எமது கல்லூரியும் பாதிக்கப்பட்டுள்ளது. காலத்துக்குக் காலம் பண்டத்தரிப்பு, அளவெட்டி, மருதனாமடம் என எமது கல்லூரி, பல இடங்களில் தற்காலிகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதிபரும், ஆசிரியர்களும், மாணவர்களும் சகலவிதமான கஷ்டங்களுக்கும் முகம் கொடுக்கின்றார்கள்.

மகாஜன பழைய மாணவர் இலண்டன், பாரீஸ், கனடா என கிளைகள் நிறுவி ஒன்று கூடலிலும், கல்லூரிக்கு உதவுவதிலும் முன் நிற்கின்றனர். மகாஜனாவுக்கென்று ஒரு தனியான பாரம்பரியம் உண்டு. ஒரு முழுமையான கிராமத்தில் அமைந்து, முழு நாட்டினதும் தலை சிறந்த கல்லூரியாக வளர்ச்சி பெற்ற வரலாறு அதற்கு உண்டு. இந்தப் பாரம்பரியத்திற்கும், வளர்ச்சிக்கும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், ஊரவர்கள் என பலர் காரணமாயுள்ளது போலவே, கல்லூரி அமைந்துள்ள அம்பனை மண்ணும், அதனுடைய வானுயர்ந்த கட்டிடங்களும், அங்கு குடிகொண்டுள்ள நடராஜர் ஆலயமும் துணை நின்றன.

1943 இல் மகாஜனாவில் உதைபந்தாட்டம் தொடங்கப்பட்டது. மகாஜன உதைபந்தாட்டத்திற்கு இன்று வயது 50. உதைபந்தாட்டத்தின் பொன்விழா ஆண்டு இது. மகாஜனாவின் அபரிதமான புகழுக்கு காரணமான இன்னொருவர் திரு T பத்மநாதன் ஆவர். அவரின் திடீர் மரணம் கவலைக் குரியது. அவர் பெற்றுத்தந்த வெற் றிகள் வேறொரு நாடாயின் சரித்திரத்தில் நிற்கத்தக்க சாதனைகளாயி ருக்கும். T.P. யின் நினைவு மகாஜனாவில் என்றும் நிலைத்து நிற்க பழைய மாணவர்களாகிய நாம் ஏதாவது செய்தாக வேண்டும். T.P.யும் அவரின் வெற்றிகளும் எதிர்கால சந்ததிகள் என்றும் மகாஜனாவில் தரிசிக்கக்கூடிய வகையில் காட்சிக்கு வைக்கப்பட வேண்டும். மகாஜனாவில் பாவலர் துரையப்பாபிள்ளைக்கு பெரிய சிலை உண்டு. அமரர் ஜெயரத்தினத்திற்கு வெண்கலத்தில் மார்பளவு சிலை உண்டு. T.P. யின் நினைவுக்கு வெளிநாட்டு மகாஜனா விளையாட்டுப் பிரியர்கள் ஏதாவது செய்வார்களா? செய்வார்கள் என நம்புகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MAHAJANA COLLEGE OLD STUDENTS ASSOCIATION (UK)

Income and Expenditure Account for the two years ended 31st May 1993

| **INCOME** | £ | £ |
|---|---|---|
| AGM and Dinner 1992 | 2,063 | |
| Open Day and Dinner 1993 | 2,338 | |
| Dance Programme | 3,032 | |
| JSSA Cricket and Football | 194 | |
| Scholarship Project Donation | 100 | |
| Membership | 200 | |
| Interest Received | 90 | |
| | ----- | 8,017 |
| **EXPENSES** | | |
| AGM and Dinner 1992 | 1,419 | |
| Open Day and Dinner 1993 | 1,981 | |
| Dance Programme | 2,001 | |
| JSSA Cricket and Football | 163 | |
| Postage and Stationery | 102 | |
| Bank Charges | 105 | |
| | ----- | 5,771 |
| | | ----- |
| Excess of Income over Expenditure | | 2,246 |
| **Less** | | |
| Scholarship Project Donation | 600 | |
| Donation to Miss Thangamah Appakutty | 200 | |
| | ----- | 800 |
| | | ----- |
| | | 1,446 |
| B/F from last period | | 3,152 |
| | | ----- |
| Balance as at 31st May 1993 | | 4,598 |
| | | ===== |

**CURRENT ASSETS AS AT 31ST MAY 1993**

| | |
|---|---|
| Bank Current Account | 911 |
| Bank Deposit Account | 3,687 |
| | ----- |
| | 4,598 |
| | ===== |

S S Rajkumar
Hon. Treasurer

14 Kneller Road
New Malden
Surrey KT3 5NE

15th June 1993



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16, Greenfield Avenue
Surbiton
Surrey KT5 9HR.

# SECRETARY'S REPORT

*It gives me great pleasure to present this Sixth year report of the Association in this newsletter. It is particularly pleasing to report the continued progress. The growing membership and the success of fund raising activities have made Mahajana O.S.A as one of the successful old students association functioning in this country. This report covers the period from July 92 to June 1993.*

FUNCTIONS

Two major sports and cultural events were held during last year which were very successful financially and in attendance.

Open day-19th July '92:
This event aimed for the whole family was held in Rutlish School, Merton Park this year. Cricket, Football, Netball, Sports meet and indoor games during the day were followed by Bharatha Natyam and vocal music in the evening. About 400 people attended the event. Union and Skandavarothaya College Old Students were invited to compete in the team events. All three Challenge trophies were won by Mahajana.

Dance programme - 20th September '92:
A Bharatha Natya performance by 'Pathmashri' Chitra Visweswaran, the famous artiste from South India was held in Alperton High School, Wembley. This was the first time Mahajana OSA undertook such an ambitious project and was a huge success. An audience of around 400 enjoyed the performance. Net proceeds from this programme will be sent to the School to use towards the cost of employment of specialist teachers.

SPORTS COMPETETIONS

Jaffna Schools Sports Association U.K organised a Cricket Festival and a Soccer tournament which brought back old memories.

Cricket Festival - 31st August '92:
We did well in this competetion to the surprise of many. We lost in the semi finals to St.Patricks College by the narrow margin of four runs.

Soccer Festival - 12th April '93:
Mahajana College successful record in football back home made us one of the favourites but we lost in the qualifying round.

PROJECTS

Scholarship fund:
We are continuing with our commitement to send funds to those students sponsored by the association. There has been a temporary delay in sponsoring new set of students due to the problems back home.

Women Refugees:
£200 was sent to Thurkai Amman Kovil Trustees to help the women affected by the trouble as decided at the last AGM.

OBJECTIVES

We are continuing with our objectives to obtain charitable status, increasing membership, establishing links with OSA in other countries and producing an annual News letter.

***Above all the success of our Association is due to hard work by the committee and active participation of the Old students, Staff and Well-wishers. Our sincere thanks and gratitude to everyone for their support.***

**W.Thayalan - Hon.Secretary 1989/93**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது ஆசிரியர்களை நன்
றியுடன் நெஞ்சில் நிறுத்து
வோம்.

# MR K KRISHNAPILLAI

**Vice Principal - 1944 to 1962**

When we remember the Golden years of Mahajana's history, the 50's and early 60's, we should mention about our vice principal Mr K Krishnapillai who worked hand in hand with our late principal Mr Jeyaratnam. There will be a detail article about Mr K. Krishnapillai in our next News Letter.



Mr K Krishnapillai with his Wife and his Grandchildren

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ARUL & CO

SOLICITORS & LEGAL EXECUTIVES
Administrators of Oaths

Contact us for all your legal matters including

* Immigration Cases
* Matrimonial Matters
* Landlord & Tenant
* Traffic Offences
* Employer-Employee Disputes
* Will and Probate
* Personal Injury
* Commercial Litigation
* Liquor Licensing
* Conveyancing

**LEGAL AID WORK UNDERTAKEN**

P ARUL LLB (Hons)(Lond)
21 RECTORY LANE
TOOTING BROADWAY
LONDON SE17 9PZ
Tel 081 - 672 8964

## *LONG LIFE AND HAPPINESS*

**THAT'S WHAT WE ALL WISH FOR**

Abbey Life could help you make that wish a reality. For advice without obligation on Life assurance, Pensions, Investments, critical Illness Cover, Private Medical Care and Savings Plans.

**Please Contact:**

V M Thavarajah (Thavam)
Member of the Life Insurance Association
Company Representative
Senior associate

ABBEY LIFE
Whitgift Branch
Abbey Life House
51 Wandle Road
Croydon
Surrey CR9 1RT
Tel: 081 - 401 0000
Fax: 081 - 686 6268

AbbeyLife

SS/4821/91

## PLUMPING

## DECORATING

## ELECTRICALS

## CENTRAL HEATING

**Any Small Works**
**Very reasonable rate**

**Please Contact:**

Logan 081 - 297 9032
Kuddy 081 - 469 0471
Mobile 0831 - 217 136


## மகாஜனாக் கல்லூரி
## பழைய மாணவர் சங்கம், கனடா
## நிர்வாக சபை 1992-1993

திரு. பொ. கனகசபாபதி - தலைவர்
திரு. இ. இரவீந்திரன் - செயலாளர்
க. துரைசிங்கம் - உபதலைவர்
திரு. சி. சிவகுமார் - பொருளாளர்
திரு. ந. நவசீலன் - உப செயலாளர்
திரு. ம. சிவராஜா - உப பொருளாளர்
திரு. செ. சுப்பிரமணியம் - உறுப்பினர்
திரு. செ. சிவநேசன் - உறுப்பினர்
திரு. ந. நந்தீஸ்வரன் - உறுப்பினர்
திரு. ந. பிரதீபன் - உறுப்பினர்
திரு. ச. நந்தபாலன் - உறுப்பினர்
திரு. சி. பத்மசிகாமணி - உறுப்பினர்
திருமதி சிவாஜினி சுகுமாரன் - உறுப்பினர்
திருமதி. சிறிரஞ்சனி வியஜேந்திரா - உறுப்பினர்
திரு. அ. யோகரத்தினம் - விளையாட்டுத்துறை பொறுப்பாளர்
திரு. செ. செல்வரத்தினம் - விளையாட்டுத்துறை பயிற்றுனர்
திரு. ம. சிவராஜா - உறுப்பினர்
திரு. ப. பாலாஸ்கந்தன் - உறுப்பினர்
திரு. செ. இராஜசிறி - உறுப்பினர்
திரு. ந. இராஜேந்திரா - உறுப்பினர்
திரு. ந. சிறிதரன் - உறுப்பினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Best Soccer Coach in Sri Lanka

# LATE TP PATHMANATHAN

A Jogaratnam
Prefect of Games
Mahajana
1966 - 1984

It is my privilege to express on behalf of the old students of Mahajana College Tellippalai, our sincere appreciation of the services of Mr TP Pathmanathan affectionately known as T.P. Master.

His untimely death has removed from us one of the many devoted and faithful stalwarts who helped Mahajana to attain its present enviable status.

My first contact with him goes back to the 1960's when I joined Mahajana as a member of its tutorial staff. TP was then the librarian of the school but he was never contended with books-shelves and magazine racks. Rather, his thoughts wondered over the football field corner kick and boundaries and hattricks. TP liked more were soccer, field hockey and cricket.

Two astute qualities endeared TP not only to the students, but teachers, old students as well as the soccer loving public of Jaffna. It may sound strange but is a fact that Mahajana had succeeded in gaining the support of a large number of people in Jaffna town who enjoyed good soccer, TP being a super player himself practised with the boys while he coached them and could teach them the finer techniques. TP insisted on discipline as a key to success.

If records speak for themselves, then it is worthwhile to mention that no other school in the history of Jaffna school sports association won the coveted soccer championships trophy for eight years in succession purely due to the dedication and training potential of one and only TP.

Mahajana soccer team established another unique destination in winning the singer shield as champions of all Island soccer tournament in 1971 and again the Ceylon Schools football championship in 1977 by beating the much fancied St Benedicts College in the final. All these feats would not have been possible if TP was not there to guide and direct.

Besides soccer our hockey team too won the Jaffna Schools championships several times. So great was our hockey talent that in 1960 three of our team players were selected to represent the Ceylon Schools Hockey Association Team.

TP's contribution to our cricket again is great. On several occasions our teams were considered as the best in the Peninsula. At times our teams went up to play in the final rounds of championships in the all island tournaments.

TP has engraved his name in gold in the history of Mahajana's present glorious stature. May his soul rest in peace.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BEST SOCCER COACH IN SRI LANKA
# எங்கள் ரி.பி. காலமானார்



## அமரர் T.பத்மநாதன்
(உதைபந்தாட்டப் பயிற்சியாளர்,
நூலகப்பொறுப்பாளர்.
தெல்லிப்பளை மகாஜனாக்கல்லூரி)

**தோற்றம்: 10.02.1934**
**மறைவு: 06.11.1992**

மகாஜனாக் கல்லூரியின் உதைபந் தாட்டப் பயிற்சியாளர் திரு T.P. பத்மநாதன் 6.11.92 அன்று மாரடைப்பால் காலமானார். "மகாஜன" என்கின்ற கிராமத்துப் பாடசாலையை உதைபந் தாட்ட வெற்றிகளின் மூலம் அகில இலங்கையிலும் புகழ் பரவி நிற்கச் செய்தவர், திரு T.P.பத்மநாதன். 1960 ஆம் ஆண்டிலிருந்து மகாஜனாவின் நூலகப் பொறுப்பாளராகவும், உதைபந்தாட்ட, கொக்கி பயிற்சியாளராகவும் சேவையாற்றி ஓய்வு பெற்றவர் T.P. கட்டுடை மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண் டாலும் தெல்லிப்பழையைத் தன் சொந்தக் கிராமமாக ஏற்று கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக கல்லூரிக்கும், கிராமத்திற்கும் என்றும் வற்றாத புகழினைத் தேடித் தந்தவர்.

மகாஜனாக் கல்லூரி இரண்டு ஆண்டுகள் அகில இலங்கை உதைபந் தாட்ட சாம்பியன்களாகவும், தொடர்ந்து எட்டு முறை(1967-1974) முதலாம் பிரிவு யாழ் சாம்பியன்களாகவும் 1 ஆம், 2ஆம், 3ஆம் பிரிவுகள் ஒரே வருடத்தில் யாழ் மாவட்ட சாம்பியன்களாகவும், வெற்றி பெற்றவைகளை T.P. பெற்றுத்தந்த வெற்றியின் சிறு பகுதியாக நினைவு கூர்வோம்.

அவரின் திடீர் மறைவால் துயருறுகின்ற மனைவி, பிள்ளைகள், பல்லாயிரக் கணக்கான உதை பந்தாட்ட ரசிகர்கள் ஆகியோருடன் நாமும் எங்கள் அனுதாபங் களை பகிர்ந்து கொள்கிறோம். அவரின் நினைவாக 'கண்ணீர் அஞ்சலி' என்ற தலைப்பில் பாரீஸ் கிளையினர் வெளியிட்ட அஞ்சலியை மீண்டும் பிரசுரிக்கின்றோம்.

## கண்ணீர் அஞ்சலி

புகழ் பூத்த எம் கல்லூரியின்
புகழ் மிக்க சாதனைகளின்
ஒப்புயர் வில்லா நாயகனே!
இறுக்கமான போட்டி யொன்று
விறுவிறுப்பாக நடந்து கொண்டிருந்தவேளை
'கோல்' ஒன்று போனது போல்
அதிர்ந்தன எம் நெஞ்சம்-நீர்
மறைந்து போன செய்தி கேட்டு.
சிதைந்து போன தேசத்திலும் -நீவிர்
சிருஷ்டித்த வீரர்கள்தான் எத்தனை! எத்தனை!

'சுகததாஸ விளையாட்டரங்'கிலும்
ஒரு கிராமத்து மின்னலா!
வியந்து நின்றன விழிகள்!!
ஆம்! தெல்லிப்பளை கிராமத்திலிருந்து
குடாநாடு மட்டுமல்ல
சுகததாஸ திடல் வரை
வெற்றி கொண்ட வேந்தனே
நீர்
அகில இலங்கை ரீதியிலும்
உருவாக்கிய வீரர்கள்தான் எத்தனை பேர்!
உமக்கோ,
வயதுதான் ஐம்பது.
ஆனாலும்
எட்டி ஒரு அடிவைத்து
தலை உசுப்பி ஒரு உச்சு உச்சி
நிமிர்கையில்,
உதைபந்தாட்டக் களத்திலே -உம்
மாணவனே அதிர்ந்து போவான்.

கல்லூரிச் சரித்திரத்தில்
சாகா வரம் பெற்ற நாயகன் நீர்.

மகாஜனாவின் புகழுக்கு
ஒருவர் அதிபர் ஜெயரத்தினம் என்றால்
இன்னொருவர் T.P.தான் என்று
எங்கள் சரித்திரம்
காலம் காலமாய்ச் சொல்லும்.

நீர் விதைத்த விதைகள்
விழுதுகள் பரப்பி
வியாபித்துக் கிடக்கின்றன.

நாளைய மகாஜனாவின்
ஒவ்வொரு வீரனும்
உதைபந்தாட்டக் களம் புகுகையில்
உமது பெயரை உச்சரித்த வண்ணமே
புகுவான் என்பதில் ஐயமில்லை.
இது நிச்சயம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்று நாயகர் மகாதேவன்

**மயிலங்கூடலூர் பி.நடராசன்:** கவிஞர் ,எழுத்தாளர், திறமைமிக்க முன்னாள் ஆசிரியர், புகழ்மிக்க பழைய மாணவர். பழைய மாணவர் சங்க செயலாளர் உட்பட பல பொறுப்பான பதவிகள் வகித்து கல்லூரியின் முன்னேற்றத்திற்கு உதவுபவர்.

'சாந்துணையும் கல்' என்பது வள்ளுவர் ஆணை. இவ்வாணையை ஏற்று வாழ்நாள் முழுவதும் கற்பவர் சிலரே. அவர்களுள் ஒருவர் திரு மகாதேவன் அவர்கள். கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் ஆரம்பக் கல்வியையும், இடைநிலைக் கல்வியையும் பெற்றபின் 1939 ஆம் ஆண்டு இலண்டன் மற்றிக்குலேசன் தேர்வுக்குத் தோற்றினார். ஆங்கிலம், ஆரம்பக் கணிதம், தமிழ், இலத்தீன், ஆங் கில நாட்டு வரலாறு ஆகிய பாடங்களுக்குத் தோற்றி சித்தியெய்தினார். ஆங்கிலம், இலத்தீன் ஆகியவற்றில் பெற்ற கல்வி இவரை ஆங்கிலத்தில் வல்லவராக்கியதோடு, ஆங்கில, தமிழ் மொழிபெயர்ப்புக் கலையிலும் ஆற்றல் வாய்ந்தவராக்கியது.

இலண்டன் பல்கலைக்கழகத் தேர்வுக்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தபோது இலங்கைப் பல்கலைக் கழகத்தில் கல்வி பெறுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1945 ஆம் ஆண்டு வரலாற்றுப் பாடத்தில் இலங்கைப் பல்கலைக் கழகக் கலைமானிப் பட்டம் பெற்றார். இடையில் நிறுத்தப்பட்ட இலண்டன் பல்கலைக் கழக வெளிவாரிக் கல்வியைத் தொடர்ந்து பயின்று 1949 இல் இலண்டன் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுச் சிறப்புப் பட்டத் *(B.A.Hons.History)* தேர்வுக்குத் தோற்றிச் சித்தி யெய்தினார்.

கற்பித்தலுக்கான சிறப்புப் பயிற்சியைப் பெறாதவரை சிறந்த ஆசிரியராகத் திகழ முடியாது என உணர்ந்த திரு மகாதேவன் 1951 ஆம் ஆண்டு கல்வி டிப்ளோமா *(Diploma in Education)* பயிற்சியையும் முடித்து அதற்கான பட்டத்தையும் பெற்றார். கற்றல்-கற்பித்தல் என்ற இரு தொழில்களுமே அவரை எப்போதும் கவர்ந்தன.

## ஆசிரியர் மகாதேவன்

இலங்கைப் பல்கலைக்கழகக் கலைமாமணிப் பட்டம் பெற்ற திரு மகாதேவனை கொக்குவில் இந்துக் கல்லூரி 1-10-1945 இல் ஆசிரியராக உவந்தேற்றுக் கொண்டது. ஆனால் 1-1-1946 இல், யாழ் இந்துக் கல்லூரி இவரை விரும்பி ஏற்றுக் கொண்டது. ஆறு ஆண்டுகளாக யாழ் இந்துக் கல்லூரியில் இவர் கற்பித்த முறை இவரது புகழ் எங்கும் பரவக் காரணமாயிருந்தது.

## தேர்ந்தெடுத்த திறலாளர்

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியை மிகுந்த உயர்நிலைக்குக் கொண்டுவந்த அதிபர் திரு தெ.து. ஜெயரத்தினம் அவர்கள் ஒருவகையில் கண்ணப்ப நாயனாரைப் போன்றவர். ஈழத்திலும், பாரதத்திலும் ஆற்றல்மிக்க ஆசிரியர்களாக விளங்கிய பலரைத் தேர்ந் தெடுத்து மகாஜனாக் கல்லூரியில் நியமித்தார். அவ்வாறு அவர் தேர்ந்தெடுத்த திறலாளர்களில் ஒருவராக விளங் கியவர் திரு மகாதேவன்.

## தெல்லிப்பளையில்

1952 ஆம் ஆண்டு அவர் மகாஜனாக் கல்லூரியில் ஆசிரியரானார். வரலாற்று வாணராகிய அவர் கொள்வோராகிய மாணவர் உள்ளம் விரும்பும் வகையில் வரலாற்றைக் கற்பித்தார். கற்பித்தலோடு நின்றுவிடாது உயர்தர மாணவர் மன்றம், விளையாட்டுத்துறை, இல் லம் ஆகியவற்றின் பொறுப்பாசிரியராகவும் பணியாற்றிக் கல்லூரியின் பலதுறை வளர்ச்சிக்கு உழைத்தார். மாணவர் மன்றங்களில் உரையாற்றுதல், பட்டி மன்றங்களில் வாதங்கள் நிகழ்த்துதல் மூலம் எல்லா மாணவர்களது உள்ளத்தையும் தம்பால் ஈர்த்தார்.

1952 க்கும் 1962 க்கும் இடைப்பட்ட காலகட்டத்தை மகாஜனக் கல்லூரியின் பொற்காலம் எனத் திரு மகாதேவன் அவர்கள் கருதுகிறார்கள். அவர் பின்வருமாறு கூறுகிறார்:

"My association with Mr.T.T.Jayaratnam extends over a period of nearly twenty years. I have worked with him as an assistant for thirteen years and as Deputy Principal for the last seven years. The rapid growth of Mahajana during this period is phenomenal. The Period from 1952-1962 may be termed the Golden Age of Mahajana......"

Mahajana, Jayaratnam Valedictory Number, Vol.39. Dec.1970. P.24

இப்பொற்காலத்திலும் அதன் பின்வரும் மகாஜனா என்ற உறுதியான கட்டிடத்தைத் தாங்கிய வலுவான தூண்களில் அவரும் ஒருவர் என்றால் அது மிகையன்று.

## அதிபர் மகாதேவன்

1970 ஆம் ஆண்டு மார்கழி மாதம் மகாஜனாக் கல் லூரி அதிபர் தெ.து. ஜெயரத்தினம் அவர்கள் தமது ஐம்பத்தைந்தாம் வயதில் ஓய்வு பெறும் நிர்ப்பந்தம் ஏற் பட்டபோது, திரு மகாதேவன் துணை அதிபர் அதி பராகும் 'மயின் முறைக் குலமரபில்' அதிபரானார். அதிபராவதற்குரிய தகுதிகள் அனைத்தும் பெற்ற அவர் 1-1-1971 முதல் அதிபரானார். இதில் வியப்பு எதுவுமில்லை. அமரர் ஜெயரத்தினம் அவர்களின்பின் அவர் அதிபரான போது எத்துணை நம்பிக்கையோடும் உறுதியோடும் அப்பதவியை பொறுப்பேற்றார் என்பதை அவரே பின் வருமாறு கூறுகிறார்:

"It is rather unfortunate that such a colourful and dynamic personality should be moved from our midst by the new dispensation to retire teachers before sixty. Though he has retired from the scene , it consoles us a great deal that he is still with us to guide us in running the institution. He will be a guide and source of inspiration to us on whose shouoders has fallen the responsibility of guiding the destinies of Mahajana.

- Mahajana - Vol. 30, P24

'மகாஜனாவின் சிற்பி தெ.து.ஜெயரத்தினம் கல்லூரி வாழ்வோடு இரண்டறக் கலந்து நிற்கின்றார். எனவே கல்லூரிப் பணியைச் சிறப்பாக, தொடர்ந்து நிறை வேற்றலாம்' என திரு மகாதேவன் நினைத்தார். ஓன் றரை ஆண்டுகள் அவர் கல்லூரியை மரபுநெறி பிற ழாது நிர்வகித்தார். கல்வியிலும் புற வேலைகளிலும் கல் லூரி தொடர்ந்தும் பீடுநடை போட்டது. ஆனால் ....ஒரே குடும்பமாக ஒற்றுமையாக விளங்கிய மகாஜனாக் குடும்பத்தில் அதிபர் ஜெயரத்தினம் இளைப்பாறிய மறு கணமே சூறாவளி சுழண்டடித்தது. மகாஜனா அரசியல் பலப்பரீட்சைக் களமாகியது. வானகத் தேவரிடை ஏற் பட்ட போட்டியில் கைலாயத்தின் சிகரம் பிடுங்கி வீசப் பட்டதுபோல அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொல்லியல் ஆய்வாளர்

வரலாற்றுத்துறையைத் துறைபோகக் கற்ற ஒருவருக்குச் சொந்த மண்ணின் வரலாற்றாய்வில் ஈடுபடுவதும் தவிர்க்க முடியாததாகி விடுகிறது. கலாநிதி கா.இந்திரபாலா, திரு சி.பொன்னம்பலம், திரு வி.சிவசாமி, திரு.ஆ.சிவ நேசச்செல்வன், திரு ஏ.கந்தையா, திரு ஆ.தேவராசன் முதலியோர் யாழ்ப்பாணத் தொல்பொருளியற் கழகச் சார்பில் ஆய்வுகளில் ஈடுபட்டபோது திரு மகாதேவன் அவர்களும் அவர்களோடு பங்கு பற்றினார். 1972 ஆம் ஆண்டு ஜனவரி 21 ஆம் நாள் இலங்கை வானொலியில் யாழ்ப்பாணத் தொல்பொருளியல் தொடர்பாக நிகழ்ந்த கலந்துரையாடலில் கலந்துகொண்ட ஒன்பது பேர் கொண்ட குழுவில் திரு.மகாதேவன் அவர்களும் இடம் பெற்றார். 1972 ஏப்ரல் 30 ஆம் திகதி யாழ் தொல் பொருளியற் கழக ஆய்வுக் குழு வல்லிபுரப் பிரதேசத்தில் மேற்கொண்ட மேலாய்வுகளிலும் திரு.மகாதேவன் அவர்க ளும் பங்கு கொண்டார்.

தொல்பொருளியல் ஆய்வில் இவர் கொண்ட ஈடு பாட்டையும் யாழ்ப்பாணத் தொல் பொருளியற் கழகப் பணிகளில் இவர் காட்டிய ஆர்வத்தையும் சிறப்பிக்கும் வகையில் தொல் பொருளியற் கழகம் இவரைத் தனது தலைவராகத் தேர்ந்தெடுத்தது.

## நினைவில் நிற்கும் ஒரு நிகழ்ச்சி

1972 ஆம் ஆண்டு தெல்லிப்பளை மகாஜனாக் கல் லூரியை நிறுவிய தெ.அ.துரையப்பாப்பிள்ளை அவர்களின் நூற்றாண்டு விழாவைப் பல்வேறு வகையில் சிறப்பாக நடத்தத் திட்டமிடப்பட்டது. சிலை நிறுவுதல், மலர் வெளியிடுதல், விழா எடுத்தல் ஆகிய அனைத்தும் விழாச்சபைத் தலைவரான திரு.மகாதேவன் அவர்கள் தலைமையில் நுணுக்கமாகவும், சிறப்பாகவும் திட்டமிடப் பட்டு செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தன. இந்நிலையில் அதிபர் திரு.மகாதேவன் அவர்களின் இடமாற்றம் பற் றிய செய்தி எட்டியது. புதிய அதிபர் திரு.பொ.ச.குமாரசாமி தலைமையில் விழா ஏற்பாடுகள் தொடர்ந்தன. 1972 யூன் 24 ஐ ஒட்டிப் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்துவதென முடிவு செய்யப்பட்டது. விழாச்சபையின் தலைவராக இருந்து பணி தொடங்கிய திரு.மகாதேவனையும் விழா வில் முக்கிய பேச்சாளராக அழைப்பதென முடிவு செய் யப்பட்டது. இடையே 'அவர் ஏன்.....?' என்றொரு சல சலப்பு!

## குழந்தைபோல் அழுதார்!

பெற்றோர் ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு.செ. வரதராசப்பெருமாள் அவர்களும், விழாச்சபை இணைச் செயலர்களுள் ஒருவனாகிய யானும் திரு.மகாதேவன் அவர்களைச் சந்திக்க அவரது சுதுமலை இல்லத்திற்குச் சென்றோம். அடங்கிக் கிடந்த எரிமலை வெடிப்பதுபோல உணர்ச்சிப் பிழம்பாக முதன்முறையாகத் திரு.மகாதேவனை அன்று நாம் சந்தித்தோம். அவர் ஒருசிறு குழந்தை யைப்போல அழுதார். எம்மைக் கண்டதும் "மகாஜனா எனது கல்லூரி. நான் எப்பொழுதும் அங்கு வருவேன். என்னை யாரும் தடுக்க முடியாது" என்று உணர்ச்சியோடு சொன்னபோது நாமும் அழுதோம். இருபது ஆண்டுகளாக கல்லூரி வாழ்வின் உயர்விலும் தாழ்விலும் அவர்கள் ஆற்றிய பணிகளை அவர்கள் வாய்மொழியால் அறியும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது. தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியின் மாணவனாக, பழைய மாணவனாக, அவ ருடைய தலைமையில் கடமையாற்றும் ஆசிரியனாக அவரை இருபது ஆண்டுகள் யான் அவரை ஒரு யோகி யாக அறிந்திருக்கிறேன். ஆனால் அந்த ஒருநாளில் அவரை ஒரு புது மனிதனாக, நிறைகுடமாக, குணக் குன்றாகக் காணும் பேறு எனக்குக் கிடைத்தது. பாவலர் துரையப்பாப்பிள்ளை நூற்றாண்டு விழாவை மகாஜனா வரலாறு மறக்காது. அதன் சிறப்புக்கு திரு.மகாதேவன் ஆற்றிய பணியும் நிலைக்கும். ஆனால் திரு.மகாதேவன் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்த அந்த நாளின் நினைவு என்றும் எம்முள்ளத்தை விட்டகலாது. கல்லூரியின் பவள விழா ஆண்டில் பாவலர் நூற்றாண்டு விழாவை நினைவு கூர்வது பொருத்தமே.

## நூல்களே துணை

கற்பித்தலில் இருந்தும் நிர்வாகப் பொறுப்பிலிருந்தும் ஓய்வு பெற்றாலும் திரு.மகாதேவன் அவர்கள் கற்பதிலிருந்து ஓய்வு பெறவில்லை. தொடர்ந்து படித்துக் கொண்டே இருந்தார். எப்பொழுதும் நூல்களே அவருக்குத் துணை யாக நின்றன. நீரிழிவு நோயால் கால்களை இழந்தபோது நூல்களே அவரது நண்பர்களாயின. ஆனால், இறுதிக் காலத்தில் கண்களும் நோயுற்றதால் அவர் இறைவனை நினைந்துருகுவதில் முழுமையாக ஆழ்ந்தார்.

## வாழ்வின் இறுதியில் சில மணித்துளிகள்

23-3-1985 அன்று இரவு 9 மணியளவில் தம்மைப் படுக்கைக்குக் கொண்டு செல்லுமாறு திரு.மகாதேவன் கேட்டுக் கொள்கிறார். துணைவியாரும், அப்போது உடனிருந்த பிள்ளைகளும் அவரை அவரது படுக்கைக்கு அழைத்துச் செல்கிறார்கள். எவ்வித இன்னலுமின்றி மகிழ்ச்சியாக இருந்த கணவருக்கு துணைவியார் வழக் கம்போல நீராகாரம் கொண்டு வருகிறார். அவரது உள் ளத்தில் திடீரென ஒரு இனந்தெரியாத பீதி; சோகம்; அதிர்ச்சி; பிள்ளைகளை அழைக்கிறார். அயலவர்களும் வருகிறார்கள்.

'மிதித்த இடத்துப் புல்லும் சாகாது' என்று கூறக் கூடிய உயர் பண்பு மிக்க அந்தக் கல்வியாளர் சில மணித்துளிகளில் இறைவன் திருவடி நிழல்களை அர்ச்சிக்கும் புனித மலரானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









# OPEN D





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













# DAY 1992







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய மாணவர்

### சங்கீதா சிவஞானசுந்தரம் - பரதநாட்டியம்

செல்வி சங்கீதா சிவஞானசுந்தரத்தின் பரதநாட்டிய அரங்கேற்றம் 15.6.91 இல் இலண்டன் வால்தம்ஸ்ரோவில் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது. செல்வி சங்கீதா மல்லாகத்தைச் சேர்ந்த திரு சிவஞானசுந்தரம், திருமதி சிவஞானசுந்தரம் தம்பதிகளின் புதல்வியாவார். திரு சிவஞானசுந்தரம் மகாஜனாவின் புகழ்மிக்க பழைய மாணவராவார். கல்லூரி நாட்களில் மகாஜன சாரண இயக்கத்தின் மூத்த உறுப்பினராக விளங்கியதுடன் ஜப்பானில் இடம் பெற்ற சாரண ஜம்பொறியில் கலந்து கொண்ட மூன்று மகாஜனா சாரணரில் ஒருவராவார். செல்வி சங்கீதா நடன ஆசிரியை திருமதி ராகினி ராஜகோபாலின் மாணவியாவார்.



### தாரணி பாலதரன் - பரத நாட்டியம்

செல்வி தாரணி பாலதரனின் பரதநாட்டிய அரங்கேற்றம் 8.8.92 இல் இலண்டன் கொமன் வெல்த் மண்டபத்தில் மிகப் பிரமாண்டமான முறையில் நடைபெற்றது. அரங்கேற்றத்தின்போது மிகத்தரமான நிகழ்ச்சியைத் தந்த தாரணி, மகாஜனாவின் புகழ் பெற்ற பழைய மாணவர் CAPTION பாலதரன், திருமதி பாலதரன் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியாவார். தெல்லிப்பழை-கொல்லங்கலட்டியைச் சேர்ந்த திரு பாலதரனும், அவரது சகோதரன் Dr. ரகுலாதரன், சகோதரிகள் கீதாஞ்சலி, ஜெயஞ்சலி, மேனகா, நிருபா ஆகிய அனைவரும் மகாஜன அன்னையரின் முழு அரவணைப்பில் வளர்ந்தவர்கள். தாரணி திரு மதி ராகினி ராஜகோபாலின் மாணவியாவார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலண்டன் கலை உலகு

## களின் பிள்ளைகள்


### விஜயலக்சுமி பத்மநாதன் - வீணை

செல்வி விஜயலக்சுமி பத்மநாதனின் வீணை அரங்கேற்றம் மிகப் பிரமாண்டமான முறையில் 21.9.91 இல் இலண்டனில் இடம் பெற்றது. மகாஜனாக் கல்லூரியின் பழைய மாணவரான பன்னாலையைச் சேர்ந்த திரு வ.இ.பத்மநாதன், திருமதி வாசுகி பத்மநாதன் ஆகியோரின் புதல்வியான விஜியின் அரங் .கேற்றம் மிகப் பிரமாண்டமான முறையில் இடம் பெற்றாலும், நிகழ்ச்சி முழுவதும் இவரின் திறமை தெரிந்தமையை அவதானிக்க முடிந்தது. பன்னாலையைச் சேர்ந்த திரு. பத்மநாதன் இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்தில் மிக முக்கியமான உறுப்பினரும், எமது முன்னாள் பொருளாளர் திரு.வ.இ.இராம நாதனின் சகோதரருமாவார். விஜி திருமதி ருத்ராணி பாலகிருஷ்ணனின் மாணவியாவார்.



### செல்வி சுஜாயா சந்திரன் - வாய்ப்பாட்டு

செல்வி சுஜாயா சந்திரனின் இன்னிசை அரங்கேற்றம் 18.4.92 இல் பாரதீய வித்யபவன் மண்டபத்தில் மிக விமரிசையாக இடம் பெற்றது. மகாஜனாவின் பழைய மாணவர் திருமதி சரோஜினி சந்திரனின் மகளாவார். செல்வி சுஜாயாவின் பேரனார் திருE. நடராஜா அவர்களும் மகாஜனாவின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது. மயிலிட்டியைச் சேர்ந்த இவர்களின் குடும்பம் முழுவதும் மகாஜனா அன்னை யரின் அரவணைப்பில் தங்கள் கல்வியை வளர்த்துக் கொண்டவர்கள். ஆங்கில மொழியை முதல் மொழி யாகக் கொண்டுள்ள போதிலும் வாய்ப்பாட்டினைத் தேர்ந்தெடுத்து அதில் சிறப்புப் பெற்ற சுஜாயாவை பாராட்டுகின்றோம். இவர் பிரபல சங்கீத ஆசிரியை திருமதி சரஸ்வதி பாக்கியராஜாவின் மாண வியாவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MAHAJANA COLLEGE
# OLD STUDENTS ASSOCIATION (U.K.)

Estd. 1987

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (UK)

| | | |
|---|---|---|
| President | : | Mr.G.Natkunan |
| Vice Presidents | : | Mr.A.Vairavamoorthy<br>Mr.S.Manoharan |
| Secretary | : | Mr.W.Thayalan |
| Asst. Secretary | : | Mr.N.Srigengatharan |
| Treasurer | : | Mr.S.Rajkumar |
| Committee | : | |

Dr.T.Gananathan
Mr.K.Jogeswaran
Mrs.J.Maheswaran
Dr.(Mrs).I.Murugesu
Dr.S.Navaratnam
Mr.S.Prusothkumar
Mr.S.Sanmuganathan
Mr.K.Seyon
Mr.S.Srikanda
Dr.S.Sritharan
Mr.M.Thanesan
Mr.K.Thurairajah

Mr.S.Ganeshadaasan
Mr.N.Kuganesan
Mr.S.Manoharan
Mr.S.Murugiah
Dr.S.Poopalasingham
Mr.V.R.Ramanathan
Mr.G.Satkunan
Mr.C.Sivasubramaniam
Mr.S.Srikanthalingham
Mr.S.Srirangan
Mrs.P.Thangarajah






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Jaffna Schools Sports Association (UK)

JSSA(UK) Organised a Jaffna Schools Cricket Festival on Bank Holiday Monday 31st August 1992 with 12 teams participated. We Mahajanans as winners of group 'A' played St Patrick's College in the semi-final and narrowly missed to go through to the finals.



MAHAJANA CRICKET TEAM



MAHAJANA SOCCER TEAM

JSSA Soccer Tournament 1993 held on 12.4.1993 at Harrow, Mahajana participated with 10 other teams.

---

## JSSA (UK) CRICKET FESTIVAL - 93

on 30.8.1993 at John Billam Sports Ground
Woodcock Hill
Harrow
M'sex

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரன்

# குலநாதன் மாஸ்ரர்

குலநாதன் மாஸ்ரருக்கும் கவிதைக்கும் இருந்த தொடர்பு எனக்கும் உயர் கணிதத்துக்கும் இருந்த தொடர்பு ஒரு மாதிரித்தான். அவர் உயர்தரத்துக்கு, உயர்தரத்தில், உயர் கணிதம் கற்பித்தவர். கணிதம் ஒரு மொழி என்பார்கள். தமிழ் மொழியில் இருந்த ஆர்வம் எனக்கு அந்தக் கணித மொழியில் இருக்கவில்லை. அதனால் சம்பிரதாயபூர்வமாக குலநாதன் மாஸ்ரரிடம் நான் மாணவனாக இருக்க முடியவில்லை. ஒரே ஒரு நாள் மட்டும் அவருடைய வகுப்புக்குள் இருக்கவேண்டி நேர்ந்தது. அண்ணாவைத்தேடிக்கொண்டு அவனுடைய வகுப்பறைக்குள் போனபோது குலநாதன் மாஸ்ரர் இருந்தார். அண்ணா பின்வரிசையில் "வகுப்பு இன்னம் முடியவில்லை. இப்பிடி இரு" என்று முன் வரிசையில் அமர்த்திவிட்டார். "சிதம்பர சக்கரத்தை பேய் பார்த்த மாதிரி" அவர் படிப்பித்த உயர் கணிதத்தை பார்த்துக் கொண்டிருந்தேன்.

நெடுநாட்களுக்குப் பிறகு அவரோடு நெருங்கிய அறிமுகம் ஏற்படுவதற்குக் காரணம், கவிதை. ஒரு வகையில் ஆச்சரியம்தான். அதிபர் ஜயரத்தினம் காலமானபோது நான் வாசித்த அஞ்சலிக்கவிதையில் மிகுந்த ஈர்ப்புப்பெற்று என்னுடன் பேச ஆரம்பித்தார். மாலை பாடசாலை விட்டு வீடு செல்லும் வழியில் மகாஜனாக் கல்லூரியிலிருந்து அளவெட்டி புதுறோட் சந்திவரை அடிக்கடி ஒன்றாகச் சைக்கிளில் சென்ற ஞாபகமும். அடிக்கடி எழும் அவருடைய வெள்ளைச்சட்டை.. வெள்ளைக் காற்சட்டை ஞாபகமும் எனக்கு மட்டுமல்ல மகாஜனா சமூகத்தவருக்கும் நல்ல பரிச்சயம்தான்.

அவரடைய *'Trade Mark'* ஆக இருந்த பிளேன்ரீயும். "திறீறோசஸ்" சிகரெட்டும் அவருடைய மாணவர்களில் புகழ்பெற்ற பலருக்கும் எவ்வாறு தொற்றிக் கொண்டது என்பது ஒரு சுவாரசியமான விசயம்தான்.

"நீ ஏன் உயர்தர வகுப்பில் கணிதம் படிக்கவில்லை?" என்று ஒருமுறை கேட்டார். "அண்ணாவும், தம்பியும் அதைத்தானே உங்களிடம் படித்தார்கள். நான் வேறு எதையாவது படிப்போமே என்று யோசித்தேன் –" என்று அவருக்குச் சொல்லிய ஞாபகம்.

மகாஜனாக் கல்லூரியில் இரண்டு வகையான ஆசிரியர்கள் இருந்தார்கள். முதல் வகையினர் பெரிய சரீரமுடையவர்கள். மற்ற வகையினர் பெரிய சாரீரம் உடையவர்கள். குலநாதன் மாஸ்ரருக்கு இரண்டும் இருக்கவில்லை. மென்மையும் நளினமும்தான் அவருடைய இயல்பாக இருந்தது. இந்த இயல்போடு கணிதம் எப்படிக் சேதனாபூர்வமாக இணைந்து கொள்ள முடிந்தது எனக்கு இன்னும் ஆச்சரியம்தான்.

சென்ற வருடம் அவருடைய மகன் குலராஜனை லண்டனில் சந்தித்தபோது மாஸ்ரர் பற்றிய ஞாபகங்கள் கிளர்ந்தன. யாழ்ப்பாணத்தில் அவரைக் கடைசியாகச் சந்தித்போது அங்கு தளர்ந்து போயிருந்தார். இந்திய இராணுவம் இருந்த நேரம். யுத்தத்தாலும் அழிவுகளாலும் அவரும் நொந்து போயிருந்தார்.

மரணம், சுழல்காற்று மாதிரி எல்லாவற்றையும் அடித்துக் கொண்டு செல்கிறது. இப்போதய வாழ்க்கையில் நிச்சயமானதாக இருப்பது மரணம் ஒன்று மட்டும்தான். எனினும் உயர்ந்த இறவாது "அய்யனே மகனாகி வளர்ந்து, உயர் வெய்தித்" தம்முடை எச்சங்கள் வழியாகத் தொடர்ந்தும் வாழ்வார்கள். அந்த வகையில் வாழ்க்கை முடிவிலி. அது உயர் கணிதத்துக்குள்ளும் அடங்காது

**சேரன்:** தமிழின் தலை சிறந்த கவிஞர், எழுத்தாளர், பத்திரிகையாளர், மகாஜனா தந்த "மகாகவி"யின் மகன். மனித உரிமைக்காகக் குரல் கொடுப்பவர்.


MARKANDAN & CO.
SOLICITORS
EMPOWERED TO ADMINISTER OATHS
M. Markandan LL.B.

● Immigration / Home Office ● Refugee – Asylum
Commercial Conveyancing ● Matrimonial
● Licensing ● House / Flat Purchase or Sale
● Representation at Police Stations etc.

THAMIL HOUSE
720 ROMFORD ROAD
MANOR PARK
LONDON E12 6BT

LEGAL AID
WE ARE ALWAYS FRIENDLY,
EASY TO TALK AND KEEN TO HELP.
TEL: 081-514 8188 FAX: 081-514 8303


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH THE BEST COMPLIMENTS

OF

# RAJA & CO

## SOLICITORS

295 BALHAM HIGH ROAD
TOOTING BEC
LONDON SW17

TEL: 081 682 2585    FAX: 081 682 2575

*ALSO AT*

338 HOE STREET
WALTHAMSTOW
LONDON E17

TEL: 081 503 6311    FAX: 081 503 7523


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மல்லாகம் தெல்லிப்பளையில்
# மாபெரும் விளையாட்டு மைதானம்

மல்லாகம் கிராம அபிவிருத்தி சங்கத்தினால் சுமார் 700 இலட்சம் செலவில் சகல வசதிகளும் கொண்ட மாபெரும் விளையாட்டு அரங்கு ஒன்று நிர்மாணிக்கும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. 10 ஏக்கர் நிலத்தினை உள்ளடக்கிய இத்திட்டத்தில் உதைபந்தாட்ட மைதானம், கிரிக்கெட் மைதானம், கூடைப்பந்து, வலைப்பந்து, கரப்பந்து என்பனவற்றிற்கு உள்ளக விளையாட்டரங்கு, நீச்சல் தடாகம் என்பன கொண்டதாகவும் மிக நவீன வசதிகளை உள்ளடக்கியதாகவும் இருக்கும்.

மகாஜனாவின் பழைய மாணவரும், முன்னாள் ஆசிரியருமான திரு சு.சிறீ பாஸ்கரன் தலைமையிலேயே இப்பாரிய பணி நடைபெறுவது பழைய மாணவராகிய எமக்கெல்லாம் பெருமையாகின்றது.

உதவ விரும்புபவர்கள் தொடர்பு கொள்க:<br>
திரு சு.சிறீ பாஸ்கரன், தலைவர்,<br>
மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம்,<br>
மல்லாகம்.

வங்கி:<br>
இலங்கை வங்கி, இலக்கம்:- 4210T


FOR ALL YOUR LEGAL NEEDS

SRI KANTH & CO.

SOLICITORS

N.BALAKRISHNAN L.L.B

S.SRIKANTHALINGAM B.A

SRI KANTH & CO.

1ST FLOOR

604,HIGH ROAD WEMBLEY MIDDX HAO 2AF

TEL: 081-795 0648 FAX: 081-795 0649

MOBILE: 0831 195979

DON'T SIGN ANYTHING UNLESS YOU SEE THIS SIGN.

Only an Independent Financial Adviser works for you in recommending the best life insurance, pensions or unit trusts on the market. To be sure you get the best deal, contact us.

V.R. Ramanathan<br>
Proprietor

FIMBRA MEMBER

Rama & Company

INDEPENDENT FINANCIAL ADVISERS

Rama

3 THE ORCHARD,<br>
WICKFORD,<br>
ESSEX, SS12 0HB. ENGLAND.

Tel: (0268) 766624<br>
Mobile: (0831) 846991<br>
Fax: (0268) 561805


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்ச்சிக்கு உதவியவர்கள்

## "கன்ரீன்" சங்கரப்பிள்ளை

30 ஆண்டுகளுக்கு மேலாக மகாஜன தேநீர்சாலையின் பொறுப்பாளராக கடமையாற்றிய எமது பழைய மாணவர் திரு கந்தப்பிள்ளை சங்கரப்பிள்ளை 57 ஆவது வயதில் 1989 இல் கால மானார். ஆயிரக் கணக்கான மாணவர்கள், நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் ஆகியோரின் உணவுத் தேவையை மிகவும் உன்னதமான முறையில் நிறைவு செய்து, கல்லூரிக்குச் சேவையாற்றியவர் திரு சங்கரப்பிள்ளை. கல்லூரியின் மிக முக்கியமான வளர்ச்சி காலத்தில் காலம் சென்ற அதிபர் திரு ஜெயரத்தினம் அவர்களுக்கு முழு ஒத்துழைப்பு நல்கியதன் மூலம் கல்லூரியின் வெற்றிக்கு உழைத்தவர்களின் முக்கியமானவரின் மறைவினை நினைவு கூருவோம்.



திரு சங்கரப்பிள்ளையின் பிறந்த தினம் Founders Day ஆன 24.6.(1932) ஆகும், நாம் UK இல் ஒன்று கூடுகின்ற 03.07.(1989) அவரின் மறைவு தினம் வருகின்றது. திரு சங்கரப்பிள்ளையின் நினைவாக ஆசிரியர் திரு ச.விநாயகரத்தினம் எழுதிய கட்டுரையை இங்கு மறுபிரசுரம் செய்கிறோம்.

# உயிர் கொடுத்த உத்தமன்

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் ஆவார்" என்பது பெரியோர் வாக்கு. அமரர் க.சங்கரப்பிள்ளை அவர்கள் மகாஜனக் கல்லூரியில் தேநீர்ச்சாலைப் பொறுப்பாளராக முப்பது ஆண்டுகள் பணிபுரிந்து பல்லாயிரக்கணக்கான மாணவர், ஆசிரியர், பொதுமக்கள் ஆகியோருக்கு உணவு கொடுக்கும் பெரும்பணி புரிந்துள்ளார். அதனால் அன்னாரை உயிர் கொடுத்தான் எனக் கூறுவது பொருந்தும். உயிர் கொடுப்பவர் சாதாரணமானவர் அல்லர். எனவே அவர் ஒரு உத்தமர் என்பதும் வெளிப்படை. உணவு கொடுப்பதற்காகத் தேங்காய் பறிக்கச் சென்ற வேளையிலேயே தனது உயிரையும் பறி கொடுத்தார்.

திருமண வைபவம், பிறந்தநாள் கொண்டாட்டம், பாராட்டு விழா போன்றவை எமது கல்லூரி சுற்று வட்டாரத்தில் எங்கு நிகழ்ந்தாலும் அவரது பங்களிப்பும் சிறிதளவாவது நிச்சயமாக இருக்கும். கல்லூரியிற் பல்லாண்டுகளாகப் பணிபுரிந்த காரணத்தால் கல்லூரிக்கு முன்புறமாக ஒரு காணியை விலைக்கு வாங்கி அதில் ஒரு "சிவபதி" என்னும் மனையமைத்துச் சிறப்புடன் வாழ்ந்து வந்தார். இவர் கல்லூரியிற் படிக்கும் காலத்தில் இனிய குரல் வளத்துடன் திகழ்ந்தமையால் கல்லூரியில் நிகழும் விழாக்கள், கூட்டங்கள், பிரார்த்தனை நேரங்கள் ஆகியவற்றிற்கு திருமுறை ஓதும் பேறு பெற்றுள்ளார். தனக்குத் தேவையானவர்கள், நண்பர்கள், உறவினர் ஆகியோரின் வீடுகளில் நடக்கும் மரணச் சடங்குகளில் பங்குகொண்டு அங்கும் திருமுறை ஓதும் நியமும் உடையவர். தமது உறவினர் வீடுகளில் நடைபெறும் வைபவங்களில் எல்லாம் முன்நின்று பணிபுரிந்து அவ்விழாக்கள் சிறப்பாக நடைபெற உதவி வந்தமையை நாம் அறிவோம்.

அன்னாரின் குடும்பத்தினர் தமது தலைவரை இழந்து தவிக்கின்றனர். உறவினர் தமது உயிர்த்துணைவனைப் பறிகொடுத்து வருந்துகின்றனர். நண்பர்கள் தமக்கினிய உதவிகள் புரிபவர் இன்றில்லாமற் கவலைப்படுகின்றனர். நாம் என்ன செய்யலாம்?

"வகுத்தவன் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்த லரிது"

- பொதுமறை

என்ற வள்ளுவர் வாக்கிற் கிணங்க சிறுது ஆறுதலடைந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

சாந்தி! சாந்தி! சாந்தி!!!

**ச.விநாயகரத்தினம்**
மகாஜனாக் கல்லூரி
தெல்லிப்பளை,
1989-07-28

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MAHAJANA OSA - PARIS

## OFFICE BEARERS 1993 -1994

**President:**
Mrs P Balasingham
(Rtd. Teacher)

**Vice Presidents:**
Mr K Shanmugalingam
Mr K Kanageswaran

**Joint Secretaries:**
Mr S Kanesalingam
Mr P Rajakanthan

**Treasurer:**
Mr S Sutharsan


**Sports Organiser:**
Mr P Nanthakumar

**Commitee:**
Mrs P Karunaivel
Mr P Yogarajah
Mr V Hariharan
Mr Y Sivalingam


## SUB COMMITEES

**Cultural:**
Mr S Kanesalingam
(in charge)
Mr S Manoharan
Mr S Rathakrishnan
Mrs L Jeyakumar
Miss V Sinnathamby

**Sports:**
Mr P Nanthakumar
(in charge)
Mr S Sivathas
(Coach)
Mr A Sivakumaran
(Soccer)
Mr S Vimalathasan
(Volley Ball)
Mr K Manorajan
(Cricket)
Mrs T Elil Thamilvalavan
(Net Ball)
Mrs J Puvendran
(Net Ball)



11.10.92 இல் நடைபெற்ற பாரீஸ் பழைய மாணவர் சங்க ஆண்டுவிழாவில் இலண்டன் கிளைப் பிரதிநிதி.



நாடகம்:
பழைய மாணவர்கள் சிவலிங்கம், கணேசலிங்கம் தோன்றும் காட்சி.



நாடக மாலை: பார்வையாளர்களில் ஒரு பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Mahajana 'Open Day'

July 19th, 1992 a fine sunny Sunday, I took my family to Tellippalai, Mahajana College Old Students Association's s Open day which was held at Rutlish School, Merton Park. I was looking forward to this event, to meet my old friends and classmates, to relive those happy memories.... My wife, who studied in a Colombo school and my daughter who was born here were not so enthusiastic about the day. It turned out that they enjoyed the day's programme more than I did because the events were for the whole family and non Mahajanans were encouraged to participate too.

The programme for the day started at 11.30 AM with cricket against Skandavarothaya College. It was a thoroughly entertaining match which had players of all ages. It was nice to see our old heroes in action again. The match was won by Mahajana convincingly. Barbeque lunch and drinks (including our Palmyrah delicacies) were available all day.

After lunch, Netball and Football matches with Union College took the centre stage. Again Mahajana did well to win both matches. Sportsmeet was the next item on the agenda. Children and ladies (even with their sarees) participated competetively in fun race, obstacle races and relay. Presents were given to the winners. For the not so active folks, there were facilities for indoor games like Karam, chess, cards etc. While these were going on, Boris Becker fans were trying to improve their skills in the adjacent tennis courts and tiny tots bored with their grand-parent's silly games were busy playing their own inteligent games in the children arena. There was a bouncing castle and slide to keep the children occupied all day. People were coming in right through the day.

It was 6 PM. The Secretary had to force the reluctant participants to move on to the adjacent hall for evening entertainment and dinner. The programme started with a minute silence in respect of the sufferings in Sri Lanka and the School's anthem. President outlined the activities of the association during the past year. The prizes for the winners were presented by Mrs.Parameswara, our old teacher. Mahajana won all three Challenge trophies for cricket, soccer and netball. The best players were awarded cups and the winners in sportsmeet were given certificates. Mrs.Vijayakumari Parameswaran's Bharatha natya performance for the first time in London delighted the 400 strong audience. This was followed by light musical entertainment by our old student Mr.Sathiamoorthy.

Drinks and food were flowing in abundance to relax the long and tiring day. The dedictaed members toiled on tirelessly inspite of the heavy schedule behind the grill and heat.

It was nice to see the huge reunion of three generations of old teachers and students from good old years of the 1930s to the modern decade of the 80s enjoying the days programme, chat and drinks. It brought back happy memories. On the whole, it was an enjoyable day for the whole family which came to an end around 10 PM.

I would like to take the opportunity to thank the Committee for organising such an enjoyable day for the old Mahjanans, their family and friends and I hope this will be an annual event.

An Old Student

"MAHAJANAN" - News letter - Edited and published by N Srigengatharan on behalf of Mahajana College Old Students Association (UK).
Type set Mrs Raja, Jeya Gengatharan and Thayalan.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாஜனன்
MAHAJANAN
NEWS LETTER 24-06-93



# எண்ணிப் பார்க்கிறேன்.

திரு. பொ. கனகசபாபதி

எண்ணிய எண்ணியாங்கெய்துவார் அவர் திண்ணியர் ஆக இருந்தால் என்ற இலக்கியத்திற்கு இலக்கணமாய், வெறுமனே நெஞ்சுரத்தையே மூலதனமாய் தன் உழைப்பின்மீது உறுதியான நம்பிக்கை வைத்து, வீட்டு விறாந்தையையே கல்விக்கூடமாக உருமாற்றி "எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு" என்பதை தெள்ளென விளக்கி இன்றைய மகாஜனாவிற்கு வித்திட்ட வித்தகர், பாவலர் துரையப்பாபிள்ளையின் தியாகம், தீர்க்கதரிசனம்பற்றி எண்ணிப் பார்க்கிறேன்.

பாவலர் நட்ட விதை முளைத்து சிறுகருவாக நிற்க, அதனை கண்ணும் கருத்துமாய் வளர்த்து, பாவலரின் வழித்தோன்றலிடம் ஒப்படைத்த சீலர், பலமுறை ஆசிரியர்கட்கு சம்பளம் தருவதற்கு தன் பணத்தையே செலவழித்த உத்தமர் அமரர் சின்னப்பாவின் தன்னலமற்ற சேவை உணர்வையும் ஈடுபாட்டையும் எண்ணிப்பார்க்கிறேன்.

தந்தை இட்ட வித்து இன்று பெருநிழல் தரும் மரமாக நிலைத்து நிற்கக் காரணமான "வினைக்குரிமை நாடிய பின்றை அவனை அதற்குரியனாகச் செய்யும்" தலைவனாய், தனதெல்லாம் கல்லூரி வளர்ச்சியிலும், நினைவெல்லாம் அதன் மாட்சியிலும், பொழுதெல்லாம் அதன் எழுச்சியிலும் தன்னை அர்ப்பணித்து குறுகிய காலத்திலே அதன் உன்னத வளர்ச்சிக்கு காரணமாக அமைந்த அதிபர் ஜயரத்தினத்தின் ஆளுமையை, செயற்திறனை எண்ணிப் பார்க்கிறேன்.

கூறாமை நோக்கிக் குறிப்பறியும் தன்மையுடைய ஆசிரியப் பெருந்தகைகள் காலத்திற்குக் காலம் கல்லூரி புகுந்தது அதன் அதிர்ஷ்டமே. இவர்களில் இந்தியாவிலிருந்து வந்து கல்வி கற்பித்த பலரின் வியர்வை மகாஜனாவின் வளர்ச்சிக்கு உறுதுணை நின்றது. அல்லும் பகலும் பாடசாலையின் உயர்வுக்குக் காரணமாக நின்ற இத்தகைய பல ஆசிரியர்களின் சேவை மனப்பான்மை, பழகும் பண்புகளை எண்ணிப் பார்க்கிறேன்.

"நிதி குறைந்தவர் காசுகள் தாரீர், நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்" என மகாஜனா ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வேண்டி நிற்க பேரன்புடன் மனமுவந்து ஈய்ந்த பெற்றோர்கள், பழையமாணவர்கள் வாய்த்திருக்காவிட்டால் இன்றைய மகாஜனாவின் வளர்ச்சியின் மைல்கற்களாகிய 25ம் ஆண்டு, 50ம் ஆண்டு, 60ம் ஆண்டு விழாக்களை நினைவு கூரும் வண்ணம் பாரிய மண்டபங்களை நிறுவி இருக்கமுடியாது. அவர்களின் அன்புள்ளத்தையும், கல்லூரியில் அவர்கள் வைத்துள்ள வேட்கையையும் எண்ணிப் பார்க்கிறேன்.

நாம் அதிர்ஷ்ட சாலிகள்! எப்படியோ இங்கு வந்துவிட்டோம்! எப்படியாயினும் இனி சுகமாக வாழ்ந்து விடுவோம்! ஆனால், இன்று ஓரிடம், நாளை இன்னோரிடம் என்று நாடோடி கூடாரம் அடிப்பது போன்று, இன்றைய நிலை இது, நாளைய நிலை எது? என்று சொல்லமுடியாத அவல வாழ்க்கையில் மீளமுடியாது தவித்து நிற்கும் இன்றைய மகாஜனா அதிபரையும், ஆசிரியர்களையும் எண்ணிப் பார்க்கிறேன்.

பாடசாலை இன்று நடக்குமா? என்று நடக்கும்? என்று நாளாந்தம் கேள்விக்குறியுடன் உறக்கம் விட்டு எழும் இன்றைய மாணவனை, வீட்டிலே படிப்பதற்கு மிகக்குறைந்த வசதிகூட இல்லாத போதும் கல்விகற்று பல்கலைக்கழகம் புகுவதற்கு ஏனைய பகுதி மாணவர்களுடன் போட்டிபோடும் அபலை மாணவர்களின் திக்கற்ற தன்மையை, ஆற்றாமையை எண்ணிப்பார்க்கிறேன்.

இவர்கட்கு நாம் என்ன செய்தோம்?
என்ன செய்யலாம்?
எண்ணிப் பாருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org